## இணைந்து பணியாற்றி

# இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2023) முகாம் அலுவலகத்திலிருந்து இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா.எழிலன், இ.கருணாநிதி, இ.பரந்தாமன், எஸ்.அரவிந்த் ரமேஷ் மற்றும் திரு.வி.க.நகர் கண்காணிப்பு அலுவலர் கணேசன் ஆகியோரிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு 'மிக்ஜாம்' புயலினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்தும் கேட்டறிந்ததோடு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

புதுடெல்லி, டிச. 6 -

இந்த இக்கட்டான காலகட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளை சீர்செய்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அனைத்து இடங்களிலும் நீர் வடிந்து, இயல்பு நிலை திரும்ப மேலும் சில காலம் தேவைப்பட்டாலும், அதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருக்கும் பணியாளர்கள், அனைத்து அரசு உயர் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் உத்தரவிட்டுள்ளேன்.**

**இந்தப் பணிகள் அனைத்தையும் நானே நேரடியாகக் கண்காணித்து வருகின்றேன்.**

**இந்த இக்கட்டான காலகட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய கல்வி முறையை, உலகத் தரத்திற்கு உயர்த்த

# தேசியகல்வி கொள்கையின் பங்களிப்புகள் என்ன?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி?



புதுடெல்லி, டிச. 6 -

அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் நேற்று முன்தினம், (04 டிசம்பர் 2023) மக்களவையில், இந்தியக் கல்வி முறையை சமச்சீரான கல்விமுறையை செயல்படுத்தவும், உலகத் தரத்திற்கு உயர்த்தவும், ஒருங்கிணைந்த கல்வியை உருவாக்கவும், தேசியக் கல்விக் கொள்கையின் பங்களிப்பு எவ்வாறு உதவும் ? என்றும் ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க்கார் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு: -

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் தேவையான அனைவருக்குமான, தாமானகல்வியை நோக்கியும் நீடித்த வளர்ச்சி இலக்கை நிறைவுசெய்யும் வகையிலும் சமச்சீர் கல்வியை அனைவருக்கும் வழங்கும் விதமாகவும், தேசியக் கல்விக் கொள்கை 2020 வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், அனைத்து மாணவர்களுக்குமான திறமைக்கும், தேவைக்கும், ஆர்வத்திற்கும் உரியவகையில், கலை கல்விமுறைகளை ஊக்கப்படுத்தவும். தேவையான அறிவியல், சமச்சீரான வளர்ச்சியை உறுதிபடுத்தவும்,

தேசிய கல்விக் கொள்கையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசின் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், உயர்கல்விக்கான தேசிய பாடத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டமாற்றங்களின் தேவையறிந்து பல்வேறு பாடங்களின் இணைய வழிக் கல்வியை ஊக்குவிக்கவும், விளைவாக, திட்டத்தின் மாணவர்களின் தேர்வுகளை எதிர்கொள்ளவும், கல்வி நிறுவனங்களில் மாற்றங்களை தேசிய கொள்கை கடைபிடித்து வருகிறது என்றும் ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க்கார் அவர்கள், மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கும் முகாமை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சிய ர்டாக்டர் அ. அருண் தம்புராஜ் ஆகியோர் முகாமை பார்வையிட்டு பொதுமக்களுக்கு காப்பீடு அட்டையை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், குணசேகரன், பக்கிரிசாமி, வீர. இராமச்சந்திரன், சுமதி நந்தகோபால், ஏழுமலை, ஜே.சடையப்பன், இராம.வெங்கடேசன், ஆனந்த ஜோதி, அரசு அதிகாரிள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கூளை கண்ணப்பர் திடலில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, பாய், போர்வை ஆகியவற்றை வழங்கி, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 47 ஆண்டு காணாத கடுமழையின் சீற்றம்!

# முதலமைச்சரின் வேகமான செயல்பாடுகளால் இயல்பு வாழ்க்கை திரும்பியது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, டிச. 6 -

47 ஆண்டு காணாத கடுமழையின் சீற்றம் - நமது முதலமைச்சரின் வேகமான செயல்பாடுகளால் அமைச்சர்களும், அதிகாரிகளும் பணியாளர்களும் ஆற்றிடும்அரும்பணி 'திராவிட மாடல்' ஆட்சியின் போர்க்கால நிவாரணப் பணிகள் பாராட்டத்தக்கவை என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டை மிரட்டிய 'மிக்ஜாம்' புயல் ஒருவழியாக நேற்று (5.12.2023) அதிகாலை தமிழ்நாட்டைக் கடந்து, ஆந்திரா மாநிலம் மசூலிப்பட்டினம், பாபட்லா பகுதி அருகே கரையைக் கடந்து செல்லுவதால், தமிழ்நாட்டில் பெய்த அடைமழை 47 ஆண்டுகளுக்கு முன்பு பெய்ததுபோல, அடாது பெய்த மழையை தமிழ்நாடு அரசும், பேரிடர் மேலாண்மைத் துறையும் மற்றும் வருவாய்த் துறை, காவல்துறை, மருத்துவத் துறை, ஊடக செய்தி தகவல் துறை போன்ற பல துறையினரும் நன்றாக ஒருங்கிணைந்து சமாளித்த விதம் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

பொதுமக்களும் பெரிதும் நிலைமையைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்புக் கொடுத்தனர்.

**முதலமைச்சரின் துரிதமான செயல்பாடுகள் ஏற்பாடுகள்!**

தமிழ்நாட்டு மின்சார வாரியத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், மின்வாரியமும் மின்தடுப்பு ஏற்படுத்தி, இம்மாதிரி நேரங்களில் வழமையாக ஏற்படும் உயிரிழப்புகள் முதலியவற்றைத் தவிர்த்து, மழை குறைந்தவுடன் மின்சாரம் மக்களுக்குக் கிடைக்கும் ஏற்பாட்டினை சிறிதும் கவனச் சிதறல் இன்றி செய்தனர்.

நமது முதலமைச்சர் மாண்புமிகு மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பான முறையில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் துறையினர் மற்றும் பல முக்கிய அதிகாரிகளுடன் அவ்வப்போது தொடர்பு நிலையில் இருந்து, செய்யவேண்டிய பணிகள், ஆங்காங்குள்ள நிலவரங்களைக் கேட்டறிந்து, ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டே இருந்தார்.

நகர்ப்புற நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலவரங்களைக் கேட்டறிந்து, வரைமுறைப்படுத்தி மீட்புப் பணிகளை மின்னல் வேகத்தில் செய்தார். அதிகம் பாதிக்கப்படவிருந்த மாவட்டங்களுக்கு அய்.ஏ.எஸ். உயர் அதிகாரிகளைப் பொறுப்பாக்கி, உடனடியாகக் கண்காணித்து செயல்பட ஆணையிட்டுத் தொடர்ந்து தேவைப்படும் பகுதிகளுக்குக் கூடுதல் அதிகாரிகளையும் பொறுப்பாக்கி கண்காணிக்கச் செய்தார்.

இவற்றை மேற்பார்வையிட்டு துரித கதியில் விரைந்து செயலாற்றிட, உதவிட மூத்த அமைச்சர் பெருமக்களையும் அனுப்பி, செயல்பட வைத்து, எந்த முடிவுகளை எடுப்பதிலும் தாமதமின்றி செயல்பட்டு மக்களைக் காப்பாற்றும் பணிகளை வரையறை செய்தார்.

**அமைச்சர்களின் - அதிகாரிகளின் அரிய பணிகள்!**

சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர், தாம்பரம், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் கடுமையான, மிகக் கனத்த மழை பெய்ததால், சென்னையே வெள்ளக்காடு ஆவதைத் தடுக்க இயலாத சூழ்நிலை; ஏராளமான பம்பு செட்டுகள், என்ஜின்கள் மற்றும் மரம் விழுந்தால் அகற்றும் கருவிகள் முதலியவற்றுடன் தயார் நிலையில் அதிகாரிகள், அமைச்சர்கள் முதலமைச்சருக்கு உடனடித் தகவல் தந்து, களத்தில் இருந்து வெள்ள நீரை அப்புறப்படுத்தும் பணிகளை விரைவாகச் செய்தனர்.

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் “வெள்ளக்காடாக சென்னையின் பல பகுதிகள் ஆனதற்கு முக்கிய காரணம், கடல் நீர் உள்வாங்கி, பிறகு கடல் நீர் கரையிலிருந்து வெளியே வருவதால், உள்ளே செல்ல வேண்டிய மழை வெள்ள நீர் போகாமல் உள்ளது. மழை நின்றவுடன் இந்த வெள்ளம் வடிய ஆரம்பித்துவிடும்; யாரும் கவலை கொள்ளவேண்டாம்'' என்று மக்கள் திருப்தி அடையும் விளக்கத்தைத் தந்துள்ளது பாராட்டத்தக்கது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தொடக்கத்திலிருந்து தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தார்.

**மிகக் குறைந்த உயிர்ச்சேதம் ஒற்றைப்படையில் ஏற்பட்டுள்ளது!**

வழமையாக புயல், டெல்டா பகுதியிலும், தஞ்சை, நாகை, கடலூர், மயிலாடுதுறை, புதுச்சேரி போன்ற பகுதிகளைத் தாக்கி, விவசாயிகளையும், மீனவர்களையும் பெரும் பாதிப்புக்கும், இழப்புக்கும் உள்ளாக்கும் நிலை இம்முறை ஏற்படாது சென்னை பக்கம் அது பயணித்து, ஆந்திர மாநிலம் சென்றுள்ளது. இயற்கையால் ஏற்பட்ட கெட்டதிலும் இது ஒரு நல்ல வாய்ப்பு என்றே சொல்லவேண்டும். ஆந்திரப் பகுதி மக்களும் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதே நமது பேரவா!

**மக்களுக்கான 'திராவிட மாடல்' அரசு!**

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வீட்டுவசதித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி, சிறுகுறு தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி போன்றவர்களின் கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு எல்லாம் மக்களைக் காப்பாற்றிட உணவு தரும் முகாம்கள், மருத்துவமும் மற்ற வசதிகளும் செவ்வனே அமைந்து எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பாதுகாத்தது குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கான ஓர் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டு நல்லாட்சி தான்; முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற முதலமைச்சரின் ஆட்சி, 'திராவிட மாடல்' ஆட்சி என்ற ஆட்சியின் இந்தப் போர்க்கால நிவாரணப் பணிகளும், அசம்பாவிதங்கள் இல்லாமல், உயிர்ச்சேதத் தடுப்புப் பணிகளும் சாட்சியங்களாக அணிவகுத்தன. உண்மையில், மக்களாட்சியின் மாண்புக்கு இவை நல்ல எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.